மதுரை கிழக்குத் தொகுதி ஒத்தக்கடை ராஜகம்பீரத்தில் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி தலைவர் அ.அய்யணன் அம்பலம் 27வது குதுபூ ஜையை முன்னிட்டு நடைபெற்ற பிரம்மாண்டமான மாட்டு வண்டி எல்கை பந்தயத்தை மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஒன்றிய செயலாளர் அ.பா.ரகுபதி தலைமையில் கழக கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., வடக்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அண்ணாமலை, கிழக்கு ஒன்றிய முன்னாள் சேர்மன் மணிமேகலை, துணைச் சேர்மன் பாலாண்டி, ஒன்றிய செயலாளர் ஹக்கீம், மருத்துவர் அணி மகுடபதி, ராஜகம்பீரம் பாண்டியன், மூவேந்திரன், போஸ், பாண்டித்துரை உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

திருச்செங்கோட்டில்

ரூ.23 கோடியில் மேம்படுத்தப்பட்ட அரசு மருத்துவமனை!

முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ. 6 – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (5.11.2025) தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் 23 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் நான்கு தளங்கள் கொண்ட புதிய மருத்துவக் கட்டடம் கட்டப்பட்டு, 225 படுக்கை வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட திருச்செங்கோடு அரசு மருத்துவமனையை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் "மக்களைத் தேடி மருத்துவம் சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் "இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும்48 போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக அரசு செயல்படுத்தி வருகிறது.

மேம்படுத்தப்பட்ட திருச்செங்கோடு அரசு மருத்துவமனை!

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 728 வெளிநோயாளிகள், 117 உள்நோயாளிகள், மாதத்திற்கு 105 பிரசவங்கள், 13,691 ஆய்வக பரிசோதனைகள், 677 USG Scan மற்றும் 204 பெரிய அறுவை சிகிச்சைகள் மற்றும் 707 சிறிய அறுவை சிகிச்சைகள் நடைபெற்று வருகிறது.

மே 2021ல் இவ்வரசு பொறுப்பேற்ற பின், திருச்செங்கோடு பகுதி மக்களின் நலன்கருதி, திருச்செங்கோடு அரசு மருத்துவமனையை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு இணையாக தரம் உயர்த்தும் பொருட்டு 2023ஆம் ஆண்டு அரசாணை வெளியிடப்பட்டு, 23 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன்படி, 23 கோடி ரூபாய் செலவில் தரைத்தளத்துடன் கூடிய நான்கு தளங்களுடன் புதிய மருத்துவக் கட்டடம் கட்டப்பட்டு, இக்கட்டடத்தின் தரைத்தளத்தில் புறநோயாளிகள் பதிவு சீட்டு வழங்குமிடம், 8 படுக்கைகள் கொண்ட தலைக்காய சிகிச்சை பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு மற்றும் நோய் பகுப்பு பிரிவு மருந்தகம், ஊசி போடும் இடம் பல் மருத்துவப் பிரிவு, தொற்றாநோய் பிரிவு, மருத்துவர் அறையும், முதல் தளத்தில் மகப்பேறு தாய்மார்கள் புறநோயாளிகள் பிரிவு, குழந்தைகள் புறநோயாளிகள் பிரிவு, பிரசவித்த தாய்மார்கள் பாலூட்டும் அறை, தடுப்பூசி மையம், அறுவை சிகிச்சைக்கு முன் மற்றும் அறுவை சிகிச்சைக்கு பின் கவனிப்பு பிரிவுகள், கண் சிகிச்சைப் பிரிவு, முதலமைச்சரின் காப்பீட்டு பிரிவு, எக்ஸ்ரே, ஆய்வகம், நுண்கதிர் ஆகியவையும், இரண்டாவது தளத்தில் எலும்பு முறிவு அறுவை சிகிச்சைக்குப் பின் கவனிப்பு பிரிவு, பிரசவத்திற்கு பின் கவனிப்பு வார்டு, மருத்துவர் அறை, செவிலியர் அறையும், மூன்றாவது தளத்தில் குழந்தைகள் நலப்பிரிவு 1 மற்றும் 2, பிரசவ அறை, பிரசவத்திற்குப் பிந்தைய பிரிவு, USG Scan அறை, பிரசவத்திற்கு அவரச சிகிச்சை பிரிவும், நான்காவது தளத்தில் பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சை பிரிவு நிலை 1,2 மற்றும் 3, தாய்ப்பால் வங்கி, மயக்கவியல் நிபுணர் அறை, அறுவை அரங்கம், மயக்கவியல், செவிலியர் அறை ஆகிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கூடுதல் கட்டடத்தின் அடிப்படையில் 150 படுக்கைகள் அதிகரித்து, 225 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட திருச்செங்கோடு அரசு மருத்துவமனையை முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப. செந்தில்குமார், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண் தம்புராஜ் தமிழ்நாடு சுகாதார திட்டத்தின் திட்ட இயக்குநர் மரு சு.வீனித் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் வி.எஸ். மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர். ஈஸ்வரன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் மரு. த.க.சித்ரா, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி

கொடர் ஊராட்சியில் கலைஞர் நூலகம் திறப்பு!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!

விழுப்புரம், நவ. 6 – விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:

துணை முதலமைச்சர் , கழகத் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப்படி (08.11.2025 – சனிக்கிழமை), காலை 10.00 மணியளவில், விழுப்புரம் தெற்கு மாவட்ட இளைஞர் அணி தி.மு.க சார்பில் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி கொடர் ஊராட்சியில் கலைஞர் நூலகத் திறப்பு விழா விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியில் கழக மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அப்துல் மாலிக் கலந்து கொண்டு நூலகத்தை திறந்து வைக்கிறார்.

சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை.சுரேஷ் , மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி , மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன் , இரா.கற்பகம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது, மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருப்பத்தூர் ஒன்றியத்தில்

ரூ.1 கோடியே 88 லட்சத்தில் புதிய தார்சாலை!

அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. பணிகளை துவக்கி வைத்தார்!

திருப்பத்தூர், நவ. 6 - திருப்பத்தூர் ஒன்றியத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிருந்து அகரம் புதூர் கிராமத்தில் ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட பல்நோக்கு கட்டிடம்,

கொடுமாம்பள்ளி ஊராட்சி மன்ற கட்டிடம் முதல் சேர்க்கானூர் மலை அடிவாரம் வரை 450மீ ரூ.17.50 லட்சம் மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கும் பணி

கொடுமாம்பள்ளி - முருகர்பாளையம் முதல் மலை வாடிவாரம் வரை 300மீ ரூ.10.45லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி மற்றும் முதல்வரின் கிராம சாலைகள் விரிவாக்க திட்டத்தின் கீழ்

அகரம் கொடுமாம்பள்ளி சாலை முதல் புதுபாளையம் அருந்ததியர் பகுதி வரை 1.5 கி.மீ ரூ.66.86 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி

கொடுமாம்பள்ளி முதல் புதுபாளையம் வழியாக ராஜகாளியம்மன் கோயில் வரை 2.150கி.மீ ரூ.86.22 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி

ஆக மொத்தம் 1 கோடியே 88 மதிப்பீட்டில் புதிய பணிகளை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருப்பத்தூர் ஒன்றியக்குழு தலைவர். விஜயா அருணாசலம், துணை சேர்மென். ஞானசேகரன், ஒன்றிய நிர்வாகிகள். அன்பழகன், சின்ன தம்பி, சிவலிங்கம், தேர்தல் பணிக்குழு நிர்வாகிகள். தேவேந்திரன், ஏழுமலை, சாமிக் கண்ணு, பிச்சாண்டி, லோகநாதன், திருநாவுக்கரசு, குமார், ராமச்சந்திரன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட கோட்டார், சவேரியார் கோவில் சந்திப்பு முதல் செட்டிக்குளம் சந்திப்பு வரையுள்ள சாலையின் இருபுறமும் ரூ. 1.93 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் சீரமைப்பு மற்றும் நடைபாதை அமைக்கும் பணியை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்வில் நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்சி லதா, ரகுராமன், கெபின் ஜாய், சந்தோஷ், மீனாதேவ், ரமேஷ், ராஜா, ஸ்டான்லி, மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், என்.பி.துரை மற்றும் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அருப்புக்கோட்டையில் தெற்கு மாவட்ட சார்பில் ஆலோசனை கூட்டம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன், நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இராஜபாளையம், ரீவில்லிபுத்தூர் மற்றும் அருப்புக்கோட்டையைச் சேர்ந்த கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். திமுக சார்பில் S.I.R. குறித்து நீதிமன்றத்தில் வழக்கு இருந்தாலும், SIR வீட்டு வாசலில் வந்து நிற்கிறது. இதனை எதிர்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு பேசினார். இந்நிகழ்ச்சியில் எம்.பி.ராணி ஸ்ரீகுமார், முன்னாள் எம்.பி.தனுஷ்குமார், இராஜபாளையம் சட்ட மன்ற உறுப்பினர் தங்கப்பாண்டியன், பாஸ்கர், ராமர், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ், சுப்புராஜ், ராஜா அருண்மொழி, கே.வி.கே. பிராபகரன், சிவப்பிரகாசம், ஏ.கே.மணி, பாபுஜி, மல்லி ஆறுமுகம், கடற்கரை ராஜ், ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஏற்பாடு:

தலைவர் கலைஞரின் வரலாற்றை எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்ள வேண்டும்!

கலைஞர் தமிழ்ச்சங்க விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, நவ. 6 - சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவனை நிறுவனராக கொண்டு கலைஞர் தமிழ்ச் சங்கம் செயல்பட்டு வருகிறது. கடந்த 28 ஆண்டுகளுக்கு முன்பு நவம்பர் மாதத்தில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் கலைஞர் தமிழ் சங்கத்தை துவக்கி வைத்தார்.



தொடர்ந்து கலைஞர் தமிழ்ச்சங்கம் 28 ஆண்டுகளாக கலைஞர் புகழ் பாடி கவின் தமிழ் வளர்ப்போம் என்ற தலைப்பில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தி வருகின்றது.

இந்தாண்டு 28 வது ஆண்டு விழாவை முன்னிட்டு கவியரசர் கண்ணதாசன் மணி மண்டபத்தில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் புரவலர் தொழிலதிபர் பி.எல். படிக்காசு முன்னிலையில் நடைபெற்றது. கலைஞர் புகழ் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது முன்னதாக மேயர் எஸ். முத்து துரை வரவேற்றுப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கலைஞர் தமிழ் சங்க விழா நோக்கம் குறித்து முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன் துவக்கி வைத்து பேசியதாவது.

தலைவர் கலைஞர் யாருக்கும் வளைந்து கொடுக்காதவர். அதே போல் நெருப்பாக நின்றவர். நெருப்பு வளையாது . நேராக நிற்கும் .கிழக்கில் சூரியன் உதிக்கிறது. ஆனால் தெற்கில் உதித்த சூரியனாக தலைவர் கலைஞர் அவர்கள் திகழ்ந்தார். மக்களுக்காகவே தன்னுடைய வாழ்வினை அர்ப்பணித்தவர் .

கலைஞர் தமிழ்ச்சங்க விழாவினை ஆண்டு தோறும் நடத்த காரணம் மொழி, இன, தன்மான உணர்வு களை ஏற்படுத்தவே இத்தகைய நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றது. ஆண்டுதோறும் சூரசம்காரம் நடக்கிறது. ஆண்டு தோறும் அழகர் சித்திரை திருவிழா நடக்கிறது. ஆனால் இதையெல்லாம் ஆண்டுதோறும்ஏன் நடக்கிறது து என்று நாம் கேட்பதில்லை. கலைஞர் தமிழ்ச் சங்கம் மூலமாக தமிழ் மொழி வளர்க்கவும் தமிழ் அறிஞர்களை தமிழ் மொழி வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களை நினைவு கூறுவதற்காகவும் இத்தகைய தமிழ்ச்சங்கம் செயல்பட்டு வருகிறது.

தமிழகத்தில் பா.ஜ. வால் காலூன்ற முடியாது!

கலைஞர் புகழினை பாடிக்கொண்டே இருப்போம் முன்பு திராவிட இயக்கம் தோன்றிய போது மொழி இனத்திற்கு ஏற்பட்ட நிலை இன்று மீண்டும் தமிழகத்திற்கு ஏற்பட்டுள்ளது . சாதி, மதம் ,மொழியின் பெயரால் பிரிவினை உணர்வு இன்று ஏற்பட்டுள்ளது. அதை நாம் முறியடிக்க வேண்டும் . அதற்கு கழகத் தலைவர் தளபதி அவர்கள் எடுக்கும் முடிவுகளை நாம் ஆதரிக்க வேண்டும். ஒன்றிய உள் துறை அமைச்சர் அமித்ஷா டெல்லிக்கு பாதுஷாவாக இருக்கலாம். தமிழகத்தில் பாதுஷாவாக ஆக முடியாது .தமிழகத்தில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் இருக்கும் வரை பா.ஜ.கவால் காலூன்ற முடியாது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் பேசினார். நிகழ்ச்சிக்கு தலைமைவகித்த கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன்பேசியதாவது :

தலைவர் கலைஞர் பன்முக வித்தகராகத் திகழ்ந்தார்!

28 ஆண்டுகளாக கலைஞர் தமிழ் சங்கத்தை நடத்திவரும் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன மற்றும் நிர்வாகிகளுக்கு பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறேன். கலைஞரின் வரலாற்றை எதிர்கால சந்ததியினர் தெரிந்து கொள்ள வேண்டும் அவருடைய வாழ்க்கை முறைகளை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் .தனது இளம் வயது முதல் தனது இறுதி நாள் வரை தமிழ் மொழி, இனம், மக்களுக்காகவே வாழ்ந்தார் மக்களுக் காக உயிர் துறந்தார். காரைக்குடிக்கு பல்வேறு சிறப்புகள் உள்ளது.

மொழி இனத்திற்காக காரைக்குடியில் பல்வேறு தலைவர்கள் பாடுபட்டார்கள். அதன் வழியில் கலைஞர் தமிழ்ச்சங்கம் செயல்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும் . கலைஞரின் வரலாற்றை எதிர்கால சந்ததிகள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக இத்தகைய கருத்தரங்குகள், பட்டிமன்றங்கள், மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றது. காரைக்குடியில் துவங்கியகலைஞர் தமிழ் சங்கம் இப்பொழுது மும்பையிலும் புதுக் கோட்டையிலும் கிளையாக பரவி உள்ளது .

28 ஆண்டுகளாக பங்கேற்கிறேன்!

இதே காரைக்குடியில் அண்ணா மன்றம் 56 ஆண்டுகளாக செயல்பட்டு வருகின்றது. அது பேரறிஞர் அண்ணாவின் புகழினை பரப்பி வருகின்றது. அதே போல் கலைஞர் தமிழ்ச்சங்கம் பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், தலைவர் கலைஞர் அவர்களின் கொள்கை. களை, புகழினை பரப்பி வருகிறது. இத்தகைய கலைஞர் தமிழ்ச்சங்கத்தனை கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் 28 ஆண்டுகள் முன்பு துவக்கி வைத்தார். கலைஞரின் புதல்வர் கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் கைராசிக்காரர். இதை சில பேர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். ஆனால் அவர் துவக்கிய இச் சங்கம் இன்று 28 ஆண்டுகளாக வெற்றிகரமாக பீடு நடை போட்டு வருகின்றது. பேரறிஞர் அண்ணாவிற்கு பிறகு கலைஞர் அவர்கள் 50 ஆண்டுகள் கட்சித் தலைவராக பதவி வைத்து கட்சியை திறம்பட நடத்தி வந்தார். ஆட்சியையும் திறம்பட ம் நடத்தி வந்தார். பேரறிஞர் அண்ணா தந்தை பெரியார் தலைவர் கலைஞர் வழியில் முதவர் தளபதி அவர்கள் திராவிட மாடல் ஆட்சியை நடத்தி வருகிறார் . அவர்களது எண்ணங்கள் கொள்கைகளை நிறைவேற்றி வருகிறார்.

அது தொடரவேண்டும். அதற்கு மக்களாகிய நீங்கள் தொடர்ந்து ஆதரவினை தர வேண்டும் . இந்த கலைஞர் தமிழ் சங்க விழா வில் தொடர்ந்து 28ஆண்டுகளாக பங்கேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை உரை ஆற்றினார்.

தொடர்ந்து நடைபெற்ற கருத்தரங்க நிகழ்ச்சியில் கழக கல்வியாளர் அணி தலைவர் புலவர் செந்திலை கௌதமன் தென்புளத்தில் பூத்த நெருப்பு என்ற தலைப்பிலும், கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ண மூர்த்தி தெற்கில் உதித்த சூரியன் என்ற தலைப்பிலும், ஆரூர் நர்மதா தென் திசை தென்றல் என்ற தலைப்பிலும் சிறப்புரை ஆற்றினார்கள்.

எம்.எல்.ஏக்கள் திருமதி தமிழரசி ரவிக்குமார், எஸ். மாங்குடி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், முன்னாள் எம்.எல்.ஏ . மாவட்ட கழக பொருளாளர் சுப. துரைராசு, காரைக்குடி துணை மேயர், மாநகர செயலாளர் நா. குணசேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். கலைஞர் தமிழ்ச்சங்க செயலாளர் பொறியாளர் தி. செந்தில் குமார் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியினை திராவிட கழக பிராட்லா தொகுத்து வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த. சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ , முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் எஸ். மாரியப்பன் கென்னடி, பொதுக்குழு உறுப்பினர்கள் கரு. அசோகன், பள்ளத்தூர் கே .எஸ். ரவி, ஜெ.மதார்சேட், ஆதி கண்ணாத்தாள், ஒன்றிய கழகச் செயலாளர்கள் சுப.சின்னத்துரை, கே.எஸ். ஆனந்த், நா. நெடுஞ்செழியன், நாகனி ரவி,லெ.மு. ரவிச்சந்திரன் வே. பூபால சிங்கம், திருமலை முத்துராமலிங்கம், ஆ. முத்துச்சாமி, துரை ராஜாமணி, குன்னக்குடி சுப்பிரமணியன் , விராமதிமாணிக்கம், வே.தமிழ் மாறன், நகர் கழக செயலாளர்கள் பெரி. பாலா,க. பொன்னுச்சாமி, மாவட்ட மகளிரணி தலைவி மணிமேகலை முத்துச்சாமி , மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஹேமலதா செந்தில் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் பவானி கணேசன், நிர்வாகிகள் மார்க்கெரெட்கமலா, திலகவதி கண்ணன், மஞ்சுளா , மாவட்ட வழக்கறிஞர் சங்க அமைப்பாளர் எஸ். பாஸ்கரன், வழக்கறிஞர்கள் ஆதி.அழகர்சாமி, பாலசுப்ரமணியன், பொன் முடி,மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் எஸ்.எஸ்.ஏ.வல்லபாய், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்த மங்கலம்சேது, அமைப்பாளர் சிங்கமுத்து, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், மாவட்ட வர்த்தக அணி ருக்மாசரவணன், இலக்கிய அணி அழகையா ,காரை. சுரேஸ், திராவிட ர்கழகம் சாமி திராவிட மணி, ஒன்றிய, நகர ,பேரூர் கழக நிர்வாகிகள் சன் சுப்பையா, ஜாகிர் உசேன், சொ.கண்ணன், துரை. நாகராஜ், சிதம்பரம், சேவியர் ,ஒன்றிய துணைச் செயலாளர் எஸ்.முத்துக்குமார் முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என் ரவி, கண்ணன் மற்றும் திரளான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள் நிகழ்ச்சி ஏற்பாடுகளை கலைஞர் தமிழ்ச்சங்க நிறுவனர் மு.தென்னவன் தலைமையில் கலைஞர் தமிழ்ச்சங்க நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

திருப்பத்தூர் ஒன்றியத்தில் 1 கோடியே 88 லட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு பணிகளை அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார்.